செ.வெ.எண்: 91 நாள்: 30.08.2016

**பத்திரிகைச்செய்தி**

இந்திய தேர்தல் ஆணையத்தின் ஆணைப்படி 2017ஆம் ஆண்டிற்கான புகைப்பட வாக்காளர் பட்டியல் திருத்தப்பணி 01.09.2016 முதல் துவங்கப்படவுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஆறு சட்டமன்ற தொகுதிகளுக்குரிய வரைவு வாக்காளர் பட்டியல் 01.09.2016 அன்று வெளியிடப்படும். அனைத்து வாக்குச் சாவடி மையங்கள், வட்டாட்சியர் அலுவலகம், நகராட்சி அலுவலகம், புதுக்கோட்டை சார் ஆட்சியர் மற்றும் அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்களிலும் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்படவுள்ளது.

பொதுமக்கள் மேற்கண்ட அலுவலகங்களில் வைக்கப்படும் வாக்காளர் பட்டியலை பார்வையிட்டு தங்களது பெயர் புகைப்படத்துடன் பட்டியலில் இடம் பெற்றுள்ளதா எனவும், தங்களது பெயர், விபரங்கள் புகைப்படம் ஆகியவை தவறின்றி காணப்படுகிறதா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அனைத்து வாக்குச் சாவடி மையங்கள், வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் நகராட்சி அலுவலகங்கள் ஆகியவற்றில் பொதுமக்கள் தங்களது பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்க்க படிவம் 6 தங்களது ஒர் பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தை ஒட்டி, வயது மற்றும் இருப்பிடம் தொடர்பான ஆவணத்துடன் விண்ணப்பிக்கலாம், மேலும் பெயர்களை நீக்கம் செய்ய படிவம் 7-லிலும், ஓரே வாக்குசாவடியில் பெயர் மற்றும் விபரங்களில் திருத்தம் மேற்கொள்ள படிவம் 8-லிலும், ஓரே தொகுதியில் இடம் மாறியுள்ள வாக்காளர்கள் படிவம் 8A-லிலும் உரிய ஆவணத்துடன் விண்ணப்பம் செய்து கொள்ளலாம்.

மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில் வாக்குசாவடி மையங்களில் பொதுமக்கள் தங்களது விண்ணப்பங்களை 01.09.2016 முதல் 30.09.2016 வரை மேற்கண்ட வாக்குசாவடி மைய அலுவலர்களிடம் அலுவலக நாட்களில் வேலை நேரம் முடிந்த பின்பு ஒரு மணிநேரமும் 11.09.2016 (ஞாயிற்றுகிழமை) மற்றும் 25.09.2016 (ஞாயிற்றுகிழமை) ஆகிய இரு சிறப்பு முகாம் நாட்களில் காலை 10.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை அளிக்கலாம். மேலும், அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள், நகராட்சி அலுவலகங்கள், புதுக்கோட்டை சார் ஆட்சியர் மற்றும் அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்களிலும் அலுவலக நாட்களில் காலை 10.00 மணிமுதல் மாலை 5.45 மணிவரை படிவங்கள் அளிக்கலாம்.

10.09.2016 (சனிக்கிழமை), 24.09.2016 (சனிக்கிழமை) ஆகிய நாட்களில், அனைத்து ஊராட்சிகளிலும் சிறப்பு கிராம சபாக்கள் காலை 10.00 மணிக்கும், அனைத்து நகராட்சிகளிலும் வார்டு சபாக்கள் காலை 10.00 மணிக்கும் நடைபெறும். இச்சிறப்பு சபாக்களில், வரைவு வாக்காளர் பட்டியல் வாசித்து காண்பிக்கப்படும். வாக்குச்சாவடி கள அலுவலர்கள் கலந்துகொள்வார்கள்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**